# ஜடவுலகு எனும் அரங்கில், கிருஷ்ணர் தந்த பாத்திரத்தை ஏற்று நடப்பது....

எல்லா மகிமைகளும் ஸ்ரீ பிரம்ம மத்வ கௌடிய சரஸ்வத ஸம்ப்ரதாய பாரம்பர்யத்திற்கு உண்டாகுக.

எனது பரமகுரு (குருவுக்கும் குரு) நேசத்துக்குரிய தெய்வத்திரு ஸ்ரீல பக்தி சித்தாந்த ஸரஸ்வதி கோஸ்வாமி தாகூர் பிரபுபாதா அவர்களுக்கும் எனது நேசத்துக்குரிய குருநாதர் தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி ப்ரமோத் புரி கோஸ்வாமிகள் அவர்களுக்கும் மகிமைகள் உரித்தாகுக.

பரம புருஷரான ஸ்ரீ கிருஷ்ணர் உண்மையான முழுமுதற்கடவுள் ஆவார். உலகில் அவர் தம்மை 4 விரிவுகளாக அதாவது ஸ்ரீ வாஸுதேவர், ஸ்ரீ சங்கர்ஷணர், ஸ்ரீ பிரத்யும்னர் மற்றும் ஸ்ரீ அநிருத்தர் என தோன்றச் செய்தார். கிருஷ்ணரை முழு திருப்திப்படுத்திட சங்கர்ஷணர், தம்மை 5 விரிவுகளாக, அதாவது ஸ்ரீ காரண உதகசாயி, ஸ்ரீ கர்ப உதக சாஷி, ஸ்ரீ க்ஷீர உதக சாயி (பாற்கடல் விஷ்ணு), மகா சங்கர்ஷணர் மற்றும் ஆதிசேஷன் என ஐந்து விரிவுகளாக்கினார்.

காரண உதக சாயி விஷ்ணு தமது பார்வையால் மாய ஆற்றலுடன் கூடி ஜட பிரபஞ்சங்களை உருவாக்கினார். பிரபஞ்சங்களை அழகுபடுத்திட கர்ப உதக சாயி விஷ்ணு, நாபியில் தாமரையுடன் தோன்றினார். தாமரை மலரில், உச்சியில் பிரம்மா, பிரபஞ்சத்தின் முதல் உயிர்வாழியாக தோன்றினார். தாமரைத் தண்டின் உள்ளே 14 அடுக்கு லோகங்கள் நிலைபெற்றன.

பூமிக்கு மேலாக 7 அடுக்குகள் – முறையே பூ, புவ. ஸ்வ, மக, தப, சத்ய லோகங்கள் எனவும், பூமிக்கு கீழே முறையே தள, அதள, விதள, சுதள, ரஸாதள, தலாதள, பாதாள என மொத்தம் 14 அடுக்கு லோகங்கள் உள்ளன.. பிரம்மா தோன்றிய முதல் அடுக்கான சத்ய லோகம், பிரம்மாவின் இருப்பிடமாகும். 14 அடுக்கு லோகங்களும் ஜடஉலகம்தான். முழுமுதற்கடவுளால் ஜட சிருஷ்டிகளை படைக்கும்படி பிரம்மா அறிவுறுத்தப்பட்டார். வேத இலக்கியங்களில் தரப்படும் இந்த தகவல்களில், ஜீவராசிகளின் பிரிவுகள் பற்றியும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மொத்தம் 84 லட்சம் வேறுபட்ட யோனிகளில் ஜீவராசிகள் பிறப்பு இறப்பு வட்டத்தில் உள்ளனர். 9 லட்சம் வித யோனிகள் நீர்வாழ்வன. செடி, கொடி, மலைகளில் 20 லட்சம் வித யோனிகள். கிருமிகள் 11 லட்சம் விதம். பறவைகளில் 10 லட்சம் யோனிபேதம். விலங்குகள் 30 லட்சம் விதம். மனித இனம் 4 லட்சம் விதம்.

இந்த ஜடவுலகில் உள்ள ஜீவராசிகளின் 84 லட்சம் வித யோனிகளின் விபரம் இதுதான்.

இந்த ஜடஉலகம் ஒரு நாடக அரங்கம். கிருஷ்ணர்தான் அரங்கநாதன். நாம் நாடக மேடையில் நடிக்க வந்துள்ள நடிகர்கள். இந்த நாடகத்தில் நமக்குள்ள வேஷம் எது? அரங்கம் நமக்காக இறைவனால் உண்டு பண்ணப்பட்டுள்ளது. இதில் பற்கேற்பவன், இதன் உரிமையாளரான கிருஷ்ணரை திருப்திப்படுத்தும்படி நாடகத்தில் நடந்துகொள்ள வேண்டும். இறைவன் நமது பங்கேற்பைக் கண்டு மகிழ வேண்டும். பாத்திரத்துக்கு ஏற்ப திறனாக நடப்பதற்காகவே புத்தியையும், சுதந்திரத்தையும் தந்துள்ளார். எனவே ஒருவன், நான் எவ்வாறு இந்த நாடக மேடையில் எனது பங்களிப்பை வழங்க வேண்டும், முழுமுதற்கடவுளின் திருப்திக்காக செயல்பட வேண்டும் என்பதனை உணர்ந்து நடக்க வேண்டும். எந்த வர்ணத்தில் இருந்தாலும், எந்த ஆஸ்ரமத்தில் இருந்தாலும், தமது சொந்த புலன் திருப்திக்கான வாசனையே இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நன்கு விளக்கமாக சொல்வதென்றால், ஒரு குடும்பஸ்தன் தனது இல்லத்தை கிருஷ்ணரது சேவைக்கானதாக கருத வேண்டும். கிருஷ்ணரது திருப்திக்காக திருமண வாழ்வு உள்ளது. மனைவி, குழந்தைகளை தனது என கருதாமல், கிருஷ்ணரது சேவகர்கள் என கருத வேண்டும். அவர்களை கிருஷ்ண உணர்வு அறிவிலேயே வளர்க்க வேண்டும்.

துறவு நெறியில் இருக்கும் ஆணோ, பெண்ணோ தங்களது தினசரி செயல்பாடுகளின் முக்கிய மையப் புள்ளியாக கிருஷ்ணர் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இது எப்படி என்றால், ஒரு வட்டம் உருவாக முதலில் மையப்புள்ளி தேவை. ஜீவராசிகளின் செயல்பாடுகள் அனைத்தும் கிருஷ்ணரை மையப் புள்ளியாகக் கொண்டிருந்தால் அனைத்து விதத்திலும் பூரண நல்லிணக்கம் உண்டாகிவிடும். நீங்கள் எந்த சூழலில் – எந்த ஆஸ்ரம நிலையில் இருக்கிறீர்கள் என்பது விஷயமே அல்ல. கிருஷ்ணர் உங்கள் வாழ்வில் மைப்புள்ளியாக இருக்கவேண்டும். அதுதான் முக்கியம். கிருஷ்ணரை விட்டு விலகுமளவுக்கு நாம் மாயையை நெருங்குகிறோம். முடிவில் மாயையின் வலையில் அகப்படுகிறோம்.

மனித உடலில் இருக்கும்போது மட்டுமே புத்திசாலித்தனத்தை பயன்படுத்த முடியும். அவ்வாறு இருக்கும்போது நாம் ஜடவுலகின் துன்பத்துக்கான காரணத்தை அறிய முடியும். நாம் துன்பத்தைப் போக்க முனைதல் எனும்பேரில் பெரும்பாலும் பொருளீட்டுதலில் ஈடுபடுகிறோம். போதுமான புத்தி, சுதந்திரம் பகவான் தந்திருந்தும் இவ்வாறு பொருளால் திருப்தி என பாடுபட்டு, பொருளை அடையும்முன், இறப்பை அடைகிறோம். நிறைய செல்வம் சம்பாதித்தால், துன்பம் போகும் என நினைக்கிறோம். மனித இனத்தின் இந்த அவல நிலையைக் கண்டு முழுமுதற்கடவுள் திருப்தியற்று இருக்கிறார். நாம் துன்பத்திலிருந்து விடுபட்டு, வெளியேறிவர, கற்றுத் தருவதற்காக பகவானே அவரது தூய பக்தர் வடிவில் தோன்றினார். இந்த தகவலை நாம், புகழ்வாய்ந்த இலக்கியமான – ஸ்ரீல கிருஷ்ணதாஸ கவிராஜ கோஸ்வாமிகள் அருளிய ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதத்திலிருந்து அறிகிறோம்.

குரு க்ருஷ்ணரூப ஹன சாஸ்த்ரேர ப்ரமாணே
குரு ரூபே க்ருஷ்ண கபே காரேண பக்த கணே

குரு என்றால் வலுவாய்ந்த என்று பொருள். கு, ரு என இரு வார்த்தைகள் இதில் உள்ளன. கு என்றால் அறியாமை எனும் இருட்டு, ரு என்றால் இருட்டை விரட்டும் ஒளி. எனவே குரு நம்மை ஜடவுலகு எனும் இருளிலிருந்து மீட்டு, உன்னதமான ஒளிக்கு அழைத்துச் செல்கிறார். தன்னை அவர் ஒரு முன்மாதிரியாக – உதாரணமாக நடந்து காட்டி, கற்றுத் தருகிறார். எனவே குரு ஒரு சாதாரண நபரல்ல. அவர் கிருஷ்ணரால், அவரது பிரதிநிதியாக நியமிக்கப்படுகிறார்.

பலவிதமான குருமார்கள் உள்ளனர். முதலில் **வர்த்தம ப்ரதர்ஷக் குரு.**

இவர் ஆனமீக பாதையைக் காட்டி ஸத்குருவிடம் சேர்ப்பிப்பவர். உதாரணத்துக்கு நான் சிறுவனாய் இருந்தபோது எனது தாத்தா மதன்மோகன் பிரபு (சீடர் – ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி தாகூர் பிரபுபாதா, ஸ்தாபகர்: ஸ்ரீ கௌடிய மடங்கள், மற்றும் கௌடிய மிஷன்) என்னை ஆன்மீக வாழ்வுப் பயிற்சிகளில் ஆர்வப்படுத்தினார். மேலும் என்னை, அவரது பல ஆன்மீக சகோதரர்களை சந்திக்கச் செய்தார். இவ்வாறாக நான் எனது தாத்தாவின் தூண்டுதலால் பல ஆன்மீக குருமார்களை சந்திக்க நேர்ந்தது. தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி தயித மாதவ கோஸ்வாமி மகராஜ், தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி ரட்சக ஸ்ரீதர் கோஸ்வாமி மகராஜ், தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி குஸூம் சரமன் கோஸ்வாமி, தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி குமுத் சந்த கோஸ்வாமி மகராஜ், ஸ்ரீல பக்தி விசார் ஜாஜபர் கோஸ்வாமி மகராஜ், தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி கமல் மதுசூதன் கோஸ்வாமி மகராஜ், தெய்வத்திரு. ஸ்ரீல மயூக் பாகவத் கோஸ்வாமி மகராஜ் போன்ற பல குருமார்கள்.

ஒருமுறை எனது குருநாதர், எனது தாத்தாவின் இல்லத்துக்கு வந்திருந்தபோது, அவரை நான் சந்தித்த உடனேயே வணங்கினேன். அவரிடம் மனதைப் பறிகொடுத்தேன். அவரது ஆன்மீகமான மென்மை, எளிமை, புலமை போன்ற வைஷ்ணவ தகுதிகள் என்னை அவர் நினைப்பாகவே இருக்கச் செய்து, ஈர்த்தன. எனது தாத்தா என்னிடம் அடிக்கடி சொல்வார்: எனது ஆன்மீக சகோதரர்கள், அனைவருமே தன்னுணர்வு பெற்ற அனுபூதிகள். (ஜீவமுக்த மகாபுருஷ). அவர்களில் யாரிடம் உனக்கு பிடிப்பு உள்ளதோ – அவரும் உன்னை சீடனாக ஏற்க அனுமதித்தால் அவரிடம் தீட்சை பெற்றுக் கொள் என்பார். இவ்வாறாக என்னை எனது குருநாதர் தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி ப்ரமோத் புரி கோஸ்வாமி மகராஜ் அவர்கள் தமது சீடராக ஏற்றுக் கொணடார். அவரை நான் அணுகி 8 ஆண்டுகள் கழித்து எனது நிலைமை, பொறுமையை பலவழிகளில் சோதித்துப் பார்த்த பின்னர் சீடராக ஏற்றார்.

உதாரணத்துக்கு சொல்கிறேன்: முதலில் குருநாதரிடம் நான் சீடனாகிட முயன்றபோது, உனது முடிவு தவறானது. நான் ஓர் ஏழை பிராமணத் துறவி. எனக்கென எந்த இடமுமில்லை, மடமுமில்லை. நான் எனது ஆன்மீக சகோதரரின் ஆலயத்தில் தங்கி வசிக்கிறேன். இதனால் என்னிடம் நீ சீடனானால் மிகவும் சிரமப்படுவாய். யாரிடம் பல இடங்கள் உள்ளதோ அந்த ஆச்சார்யாரிடம் தீட்சை பெற்று, நீ அவர்களுடன் தங்கலாம் என்றார்:

நான் பதிலாக, மகராஜ், தங்குமிடம் பற்றி எனக்கு பிரச்னை இல்லை. நான் உங்களிடம்தான் தீட்சை பெற விரும்புகிறேன் என்றேன். அவர் சொன்னார்: நீ சிறுவயதுக்காரன், படித்தவனுமல்ல, படிப்பறிவு இல்லாவிட்டால், சாஸ்திரங்களின் உள்ளர்த்தத்தை புரிந்து கொள்ள இயலாது என்றார்.

எனது தாத்தா ***வர்த்தம ப்ரதர்ஷக் குரு*** அவர்கள் மூலமாக எனது ஆன்மீக குருநாதர் ஸ்ரீல பக்தி ப்ரமோத் புரி கோஸ்வாமி மகராஜிடம் தீட்சை பெற்றேன். அவர் ***தீட்சை குரு***வாகவும், ***சிக்ஷா குரு***வாகவும் இருந்தார். அவர் என்னிடம் சொல்வார்: உடல்ரீதியாக எனது ஆன்மீக சகோதரர்கள் எத்தனைபேர் உள்ளனரோ அவர்கள் அத்தனைபேருமே உனக்கு கற்றுத்தர வல்லவர்கள்தான் (சிக்ஷா) என்பார். அதன்படி நான் தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி வல்ல தீர்த்த கோஸ்வாமி மகராஜ் (ஸ்தாபகர்: ஸ்ரீ சைதன்ய கௌடிய மடம்), தெய்வத்திரு. ஸ்ரீல பக்தி விக்ஞான பாரதி கோஸ்வாமி மகராஜ் (பொதுச் செயலாளர், ஸ்ரீ சைதன்ய கௌடிய மடம்) அவர்கள் எனக்கு **சிக்ஷா குரு**வாக இருந்தார்கள்.

அடுத்து இன்னொரு குரு: **சைத்ய குரு:** இதயத்தில் பரமாத்மாவாக இருப்பவர் சைத்ய குரு என அழைக்கப்படுகிறார். இவர் உண்மையில் பாற்கடல் மகா விஷ்ணு ஆவார். அனைவரது இதயங்களிலும் பரமாத்மாவாக வீற்றிருப்பவர். ***சைத்ய குரு***வே நம்மிடம் ***தீட்சா குரு*** வடிவம் தாங்கி வருகிறார்.

ஆன்மீக வாழ்விலான நான்குவிதமான குருமார்களின் பாத்திரம்பற்றி நான் சுருக்கமாக விவரித்துள்ளதை புரிந்திருப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

நமது மனதை முழுமுதற்கடவுளின் சேவையில் ஈடுபடுத்துவதுதான் ஆன்மீகம் ஆகும். தீட்சை குருவும், சிக்ஷா குருவும் இதைத்தான் முன்மாதிரியாக இருந்து கற்றுத் தருகிறார்கள். இதனால் நாம் அவர்களின் பாதச்சுவடுகளை (அனுகத்ய) பின்பற்றி நடக்க வேண்டும். மேலும் குரு தனிப்பட்ட நபரல்ல, அவர், பூரண உண்மையைத் தாங்கி இருப்பவர், முழுமுதற்கடவுள்தான் அவர் என்பதை மறக்கக் கூடாது. இதனை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். ஆன்மீக வாழ்வில் நம்மை ஈடுபடுத்தும், வழிநடத்தும் அவர், ஸ்ரீ கிருஷ்ணரின் பிரதிநிதி ஆவார்.

நமது மாபெரும் ஆச்சார்யர்களில் ஒருவரான ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி, தமது குரு அஷ்டகத்தில் குறிப்பிடுகிறார்: சாக்ஷாத் ஹரித்வேன சமஸ்த சாஸ்த்ரைர், உக்தஸ் ததா பாவ்யத் ஏவ ஸத்பி:– இதன் பொருள் கிருஷ்ணரது கருணை ஜீவர்கள்மேல் அவரது தூய பக்தர்கள் (குரு) மூலம் மட்டுமே வருகிறது என்பதாகும். எல்லா வேத இலக்கியங்களும் குரு,

கிருஷ்ணரிலிருந்து வேறுபட்டவரல்ல என்பதை பறை சாற்றுகிறது. வித்தியாசம் உண்டு, குரு முதுமை அடைவார். கிருஷ்ணர் முதுமை அடைய மாட்டார். எப்போதும் புத்திளமையுடன் இருப்பார். நாம் அறிவோம், பகவான் சைதன்ய மகாபிரபு, பகவான் ராமச்சந்திரர், பகவான் கிருஷ்ணர் இவர்களுக்கு நரை முடி, மீசை, தாடி கிடையாது. ஆனால் இவைகள் குருவுக்கு உண்டு. கிருஷ்ணர், (பிருஹத்–பிரமாண்ட), பிரபஞ்சங்களின் ஆளுனர் (பரமேஸ்வரர்). ஆனால் இன்னொருவிதத்தில் பார்க்கையில், குருவால் மொத்த பிரபஞ்சங்களை கட்டுப்படுத்த முடியாது.

ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர் தெரிவிக்கிறார்: இவ்வாறு கிருஷ்ணரிலிருந்து குரு வேறுபட்டு இருப்பதாய் இருந்தாலும், அவர் எந்த அளவுக்கு இறைவனிடம் நெருக்கமோ, அந்த அளவுக்கு இறைத்தன்மைகளைக் கொண்டிருக்கிறார் என்பதாகும்.

கிருஷ்ணர், மாயையைக் கட்டுப்படுத்துபவர். ஆனால் குரு, மாயைக்கு உட்படவும் வாய்ப்பு உள்ளதாக ஸ்ரீல பக்தி விநோத் தாகூர் கூறுகிறார்.

நாம மகாத்ம்யாவில்–

ப்ரதமே சிலன் தினி ஸத்குரு ப்ரதான் வ்ரமே நாம அபராதே ஹய் ஹதக்யான்

வைஷ்ணவே வித்தேஷ் கரி சாரே நாம ரஸ க்ரமே க்ரமே ஹொய் அர்த்த கமினிர பொஷ்

பொருள்: முதலில் அவர் பெரிய ஆன்மீக குரு. தொடர்ந்து அவருக்கு பேர், புகழ், சுயமதிப்பில் ஆர்வம். மற்ற பிற வைஷ்ணவர்களிடம் குறை பார்ப்பது (சாது நிந்தை). இவ்வாறு அவர் கிரமம் கிரமமாக நாம அபராதி ஆகிறார். இதனால் நாமம் சொல்ல சுவையற்று, செல்வம், புலன் திருப்தி என பற்று கொள்ளும் நிலை வருகிறது.

ஸ்ரீல பக்தி விநோத் தாகூர் இன்னொரு கட்டுரையில் கூறுகிறார்:

- ௐ அபராதம் காரணமாக ஒருவன் நாம ஜபத்தில் சுவை காண முடியாது.
- ௐ பக்தி ரஸமிக்க உன்னத தன்மை கொண்டது ஹரிநாமம். அதனை குற்றமில்லாமல் சொல்லும்போது மட்டுமே பக்தி ரஸ அனுபவத்தை தங்களது இதயத்தில் உணர முடியும்.
- ௐ தூய உணர்வுடன் உன்னதமான ஹரி நாமங்களை ஓதும்போது, இதயம் மகிழ்கிறது. கண்களில் நீர் பெருகுகிறது...இதுபோன்ற பக்திப்பரவசத்தின் அறிகுறிகளை அனுபவப்பட முடியும்.
- ௐ ஒருவர் ஹரே கிருஷ்ண நாம ஜபம் செய்தும் இந்த அறிகுறிகள் அவரில் இல்லை என்றால், அவரது இதயம் குற்றமிகு இதயம். அது பாறை போன்று உள்ளது என்றுபொருள்.
- ௐ ஆன்மீக சாதகன், அபராதமின்றி ஹரே கிருஷ்ண நாமங்களைச் சொல்ல வேண்டும். அதேசமயம் நம்பிக்கையற்றவனுக்கு நாமம் சொல்ல உபதேசிப்பதுவும் நாம அபராதம்தான்.
- ௐ விலையுயர்ந்த முத்து, பன்றியிடம் தரப்பட்டால், மதிப்பறியாது புறக்கணிக்கிறது. எனவே நம்பிக்கையற்றவனுக்கு நாம ஜபம் செய்ய உபதேசிப்பது முறையற்றது. நமது முதல் கடமை, ஹரிகதை மூலமாக அத்தகு மக்களிடையே நாம ஜபத்துக்கான நம்பிக்கையை வளர்ப்பது ஆகும்.
- ௐ எதைச்செய்வது என்றாலும், முதலில் நம்பிக்கை மிகஅவசியம் ஆகும். அப்போதுதான் செயலில் முறைமை வரும், முழுமை கிடைக்கும். எனவே தக்க தகுதி வந்தவனுக்கு நாம உபதேசம் செய்ய வேண்டும். தன்னை பெரிய குரு என நினைத்தபடி ஒருவர், தகுதியற்றவனுக்கு நாமத்தை உபதேசித்தால், நாம அபராதத்தினால் அவர் தமது நிலையிலிருந்து வீழ்ச்சி அடைய நேரிடும்.

ௐ வேத இலக்கியங்களின்படி கிருஷ்ணர், இவ்வுலகில் நாமம் வடிவில் தோன்றி இருக்கிறார். நாமம் என்பது வெறும் வார்த்தையாக– சப்தமாக இருந்தாலும், அந்த புனித நாமம் கிருஷ்ணரது உன்னத வடிவம் ஆகும்.

நாமம்–நாமி வேறு வேறல்ல. இதனை எப்போதும் மனதில் கொள்ளுங்கள். தமது இருப்பிடமான கோலோக பிருந்தாவனத்திலிருந்து கிருஷ்ணர் இங்கு நாம வடிவில் வந்துள்ளார். ஜடத்தோற்றம் கொண்ட இந்த நாடக அரங்கான பூவுலகில், நாம், கிருஷ்ணர் தந்த பாத்திரத்தில் நம்பங்கினை சரியாக செய்து முடிக்க வேண்டும்.

அதன்படி வைஷ்ணவர்களின் சகவாசத்துடன், முழுமுதற்கடவுள் கிருஷ்ணருடன் நிரந்தர தொடர்பில் இருந்திட நாம் கீழ்க்கண்ட பக்தி நெறிகளை தினமும் முறையாக பின்பற்ற வேண்டும்.

முன்பே நான் சொன்னபடி வாழ்வின் மையமாக கிருஷ்ணர் கொண்டிருக்க வேண்டும். குடும்பஸ்தராக எந்த தொழிலில் இருந்தாலும் பக்தி நெறியில் தன்னை இணைத்து வைத்திருப்பது நமது முக்கிய கார்யமாகும். கிருஷ்ணருக்கு அன்புத் தொண்டாற்றுங்கள். உதாரணமாக நமது ஜீவனத்துக்கு நாம் என்ன சம்பாதிக்கிறோமோ, அது நம் கிருஷ்ண குடும்பத்துக்கு சமைக்க, கிருஷ்ணருக்கு படைத்திட, பின் புனிதமான பிரசாதத்தை ஏற்பது? கிருஷ்ணருக்கு தொடர்புடைய புனித ஸ்தலங்கள் செல்தல், தூய பக்தர்களிடம் செல்வது, இவ்வாறாக கிருஷ்ணரது, அல்லது அவருக்கு தொடர்பான செயல்களில் நம்மை எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லா உயிர்களும் வைஷ்ணவர்கள். ஏனென்றால் அவர்கள் எல்லாம் விஷ்ணுவிலிருந்து வந்தவர்கள். இதனைப் புரிந்து கொள்ளுங்கள். அவருக்குத் தொண்டு செய்யுங்கள். மனதை கிருஷ்ணரிடம் மையப்படுத்த முடியாமல் கஷ்டப்படுகிறோம். ஜடவுலகம் துன்பக் கோட்டம். நாம் பொருளாதாரத்தில் மேல்நிலை, கல்வியில் மேல்நிலை, பலவழிகளில் நாம் மேம்பட்டு இருக்கிறோம். வெற்றிதான் என்றாலும் ஏதோ ஒரேஒரு விஷயத்தை தவற விட்டுவிட்டதாக உணர்கிறோம். அது எது என்றால், கிருஷ்ணர் நமக்கு இந்த உலக அரங்கில் நடிக்கத்தந்த பாத்திரத்தை, பொருட்படுத்தாது மிகவும் தள்ளி நிற்கிறோம் என்பதுதான். அவரது நித்ய தாசனாக இருப்பது, அவரது சேவையில் பற்றுடன் இருப்பது – இதிலிருந்து விலகியிருக்கிறோம். கிருஷ்ணர் சொன்னதைச் செய்தால், 84 லட்சம் விதமான யோனிகளிலான பிறப்பு இறப்பு வட்டத்திலிருந்து விடுபட முடியும்.

நமது நிரந்தர அடையாளத்தை உணர்ந்து, ஜடவுலகின் துயர்மிகு பிடியிலிருந்து நம்மை விடுபடுத்தி கிருஷ்ணரிடம் பற்றுதலை ஸ்தாபிப்பது – இதுவே நமது முக்கிய கார்யமாகும்.

மனிதன் எனும் வகையில் நமது பிரதான கடமை – ஜடகடமைகள் மற்றும் ஆன்மீக பயிற்சி இவற்றுக்கிடையே முறையாக சாமர்த்தியத்துடன் நடந்துகொள்வது. இதன்மூலம் நமது நித்ய அடையாளத்தை நிலைநாட்டுவது ஆகும்.

ஜடவுலகில் இருக்கும்வரை நமது கடமைகளை விடமுடியாது. இறைவனுடனான நமது நித்ய அடையாளத்தை பெற்றிட – தூய பக்தியை பயின்றிட நாம் ஆன்மீக சகவாசத்தை நாட வேண்டும். முன்பே பேசியபடி மனிதன் மட்டுமே சகவாசத்தின் உந்துதலால், இயல்பு, கலாச்சாரம், நடத்தை போன்றவற்றை ஏற்கிறான்.

பத்ம புராண வார்த்தைகளை– ஹ்ருத்காலே புருஷோத்தமாத்– முழுமுதற்கடவுளின் மகிமைகள் உலகெங்கும் புருசோத்தம தாமம் எனும் ஜகநாத் புரியிலிருந்து பரவும் என்பதனை, பகவான் சைதன்ய மஹாபிரபு பூர்த்தி செய்தார் என ஸ்ரீல கிருஷ்ணதாஸ கவிராஜ கோஸ்வாமி, ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதத்தில் தெரிவிக்கிறார். உலகின் எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் ஹரி நாமம் பரவும் என தெரிவிக்கிறார். சைதன்யரது ஆன்மீக பாரம்பர்யம் மூலம் ஸ்ரீல பக்திவிநோத்

தாகூர் அவர்களால் சக்தியளிக்கப்பட்டு, எனது பரம குரு ஸ்ரீல பக்தி சித்தாந்தந்த சரஸ்சதி தாகூர் பிரபுபாதா, ஜகனாத்புரியில் இருந்தபடி சைதன்யரின் தெய்வீக அன்பினைப் பரவச்செய்ய ஸ்ரீ சைதன்ய மடங்கள், ஸ்ரீ சைதன்ய கௌடிய மடங்கள் என ஏராளமான பக்தி மையங்களை பாரெங்கும் ஏற்படுத்தினார்.

*1936*– வியாஸ பூஜை திருநிகழ்வில் ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபுபாதா ஆசியுரையின்போது கூறுகிறார்:

“நாம் இங்கு பகவானைக் காண தகுதியற்றவர்கள். பகவானுக்கு தொண்டு செய்யும் பக்தர்களின் உயரிய கருணையால், நாம் பகவானைக் காணும் தகுதி பெறுகிறோம். முன்னேறிய அத்தகு பக்தர்களின் செயல்களை எல்லாம் நாம் பின்பற்றி நடப்பது மட்டுமே நமது ஒரேயொரு மங்களமான கார்யமாகும். சிறிதளவே அறிவு கொண்டுள்ள பலரும், தங்களது முக்கியமற்ற அனுபவங்களைக் கொண்டு, பக்தர்களை ஒப்பிட்டு பார்த்து, அடிமை போல பேசி நடக்கிறார்கள். தங்களது சித்தப்பிரமையால் அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசியபடி இருக்கட்டும். நமது புரிதல் தெளிவானது. அது–

பரிவதது ஜனோ யதா ததா வா நாநு முகரோ ந வயம் விசாரயம:

ஹரி ரஸ மதிர மததிமத்த புவி விலுதம நதம நிர்விஷம

புவி எனும் நாடக அரங்கில் கிருஷ்ணர் நமக்குத் தந்துள்ள நமது பங்கு பக்தர்களின் பாத தூசாக இருப்பது மட்டுமே. நாம் யாரையும் நமது சீடர்களாக்கவில்லை. ஆக்கவும் முடியாது. ஏனென்றால் அப்படி சீடர்களைக் குவித்தால், பக்தரல்லாத பலபேரின் விருப்பங்களின் பின்னே நாம் தவறான திசைநோக்கி ஓட வேண்டிவரும். நீங்கள் எல்லாம் என் குருமார்கள். உங்களது சீடனாக என்னை எண்ணி, இந்த வீழ்ந்துபோன ஆத்மாவான என்னிடம் கருணையுடன் இருங்கள்.

எனது பரம குருநாதர் ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தங்களது சீரத்தை விட்டபின் சைதன்ய மஹாபிரபுவின் தெய்வீக அன்பின் இயக்கத்தை பரப்புங்கள் எனும் அவரது, அன்புக்கட்டளையை, அவரை மிகவும் நேசித்த சீடர்கள், பூர்த்தி செய்தார்கள். ஸ்ரீல பிரபுபாதா பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகூரின் சீடர்களான – எனது குருநாதர், ஸ்ரீல பக்தி ப்ரமோத் புரி கோஸ்வாமி மகராஜ், தமது குருவின் விருப்பத்தை பூர்த்தி செய்திட ஸ்ரீ கோபிநாத் கௌடிய மடத்தை நிறுவினார். எனது சிக்ஷா குரு ஸ்ரீல பக்தி தயித மாதவ கோஸ்வாமி மகராஜ் ஸ்ரீ சைதன்ய கௌடிய மடத்தை நிறுவினார். ஸ்ரீல பக்தி ரட்சக ஸ்ரீதர் கோஸ்வாமி மகராஜ் ஸ்ரீ சைதன்ய சரஸ்வத் மடத்தை நிறுவினார். ஸ்ரீல பக்தி ப்ரக்ஞான் கேசவ கோஸ்வாமி மகராஜ் ஸ்ரீ கௌடிய வேதாந்த சமிதியை நிறுவினார். ஸ்ரீல பக்திவேதாந்த ஸ்வாமி மகராஜ் (ஸ்ரீல பிரபுபாதா), அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை நிறுவினார். ஸ்ரீல பக்தி சாரங்க கோஸ்வாமி மகராஜ் ஸ்ரீஸ்ரீ கௌரநித்தாய் ஆலயம் நிறுவினார்.

இந்த எல்லா அமைப்புகளிலும், பின்பற்றுவோரது இறுதி இலக்கு – தங்களது செயல்பாடுகள்மூலம் ஒவ்வொருவரது மனதையும் பகவான் கிருஷ்ணரின் மையப்படுத்தி சேவையில ஈடுபடச் செய்வதாகும். குரு வர்க்கம் காட்டிய ஆன்மீக வாழ்வை நாம் உண்மையில் வாழ விரும்பினால், நமக்குள் ஒருவருக்கொருவர் பிரிவற்ற மனத்துடன், எவரையும் விமர்சிக்காமல், ஒத்த கருத்துடன்–ஒத்த உறவுடன் சைதன்ய மகாப்பிரபுவின் தெய்வீக அன்பின் அமைப்பாக செயல்பட்டால், அத்தகு நடத்தை சைதன்ய மஹாப்பிரபுவின் தெய்வீக அன்பின் சுவையை (க்ருஷ்ண ப்ரேமை) நமக்குத் தரும். நமது உண்மை அடையாளத்தை உணர்ந்திட இது ஒன்றே வழி.

நான் பணிவுடன் எனது குருநாதரிடமும், எனது பாரம்பர்யத்தைச் சார்ந்திருக்கும் அனைவரிடமும் இந்த வீழ்ந்த ஆத்மாவிடம் கருணை காட்டிட வேண்டுகிறேன். கிருஷ்ணரது இந்த நாடக அரங்கில் என் பங்கினை நான் சரிவரச் செய்திட சக்தி வேண்டியும், எனது எஞ்சிய வாழ்நாளில் உங்களது அன்பான வழிகாட்டலை வேண்டியும், சைதன்ய மகாப்பிரபுவின் விருப்பமான தெய்வீக அன்பினை பாரெங்கும் பரப்பும் முன்மாதிரியாக நான் ப்ராணன் உள்ளவரை இருந்திழட உங்களிடம் வேண்டுகிறேன.

ஸ்ரீ சைதனய மகாப்பிரபுவின் அமைப்பின் சேவையில், தூய பக்தர்களின் தாமரைப் பாதங்களில் பாதத்தில் ஓர் அணுவாக இருந்திட இடம்தேடும்

பி.பி.போதயன்,

ஸ்ரீ கோபிநாத் கௌடிய மடம்.